**HMOP. No. 187/2024**

**Date: 09.10.2025**

**ம.சா. 1 சேகர்**

**எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் ஊரக வளர்ச்சி துறையில் இளநிலை பொறியாளராக பணி செய்து வருகிறேன். திருமணத்திற்கு பின்பு தான் எனக்கு வேலை கிடைத்தது. என்னுடைய பணி பதிவேட்டில் எதிர் மனுதாரருடைய பெயர் மனைவியாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்னுடைய மனுவில் என்ன காரணத்திற்காக கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்பதை நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 2000 ம் ஆண்டில் இருந்து பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லி வரும் நிலையில் சேர்ந்து வாழ்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. எனது ஊருக்கும் எனது மனைவி ஊருக்கும் சுமார் 15 கி.மீ துாரம் தான் இருக்கும். எங்களுக்குள் ஏற்பட்ட சிறு சிறு பிரச்சினை காரணமாக தான் அவரது தாய் வீட்டிற்கு சென்று வந்தார் நிரந்தரமாக என்னை பிரிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வேலை இல்லாத காரணத்தால் கடந்த 24 ஆண்டுகளாக என்னை பிரிந்து சென்று விட்டார். எனக்கு 2008 ம் ஆண்டுஅரசு பணி கிடைத்தது. எனக்கு ஒரே மகன் பால்ராஜ். அவருக்கு வயது தற்போது 31. என்னுடைய மகன் பிறந்தது முதல் எதிர் மனுதாரர் தான் வளர்த்து வருகிறார். பிரிந்து வாழ்ந்து வந்த காலத்தில் எதிர் மனுதாருக்கோ எனது மகனுக்கோ பராமரிப்பு தொகை கொடுத்தேனா என்று கேட்டால் மாதம் மாதம் ரூ. 4000 அல்லது 5000 மணி ஆர்டர் மூலமாக எனது மகனுக்கு கொடுத்தேன். ம.சா.ஆ. 4 2001 ல் எழுதப்பட்டது. எனது மகன் 2003 அல்லது 2004 ஆண்டில் பிறந்தார். ம.சா.ஆ. 4 பின்பு நானும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் வாழவில்லை. ம.சா.ஆ.3 சாத்துார் காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. ம.சா.ஆ. 3 ஆவணத்தை காவல் நிலையத்தில் வைத்து மிரட்டி எழுதி வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது மனைவி படிக்கவில்லை. கைரேகை தான் செய்வார். ம.சா.ஆ. 3 ஆவணத்தை எதிர்மனுதாரருக்கு படித்து

காண்பித்ததாக எந்த குறிப்பும் இல்லை என்றால் தெரிந்து கொண்டு தான் கைரேகை வைத்தார். எனது மனைவிக்கு தற்போதைய வயது 53 இருக்கும். எனது மனைவிக்கு என்னை விட்ட வேறு ஆதரவு இல்லை என்பதாலும் என்னுடன் சேர்ந்து வாழ விருப்பமாக உள்ளார் என்றும் விவகாரத்து கொடுக்க விருப்பமில்லை என்றாலும் என்னை 24 வருடமாக விட்டு சென்று விட்டதால் எனக்கு சேர்ந்து வாழ விருப்பமில்லை. விவாகரத்து செய்யும் அளவிற்கு எனக்கும் எதிர் மனுதாரருக்கும் கருத்து வேறுபாடு எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பணி பதிவேட்டில் இருந்த எனது மனைவி பெயரை நீக்க வேண்டும் என்பதற்காக தான் விவகாரத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. விவகாரத்து மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.